● தேர்தல் அதிகாரியை மிரட்டியதாக குற்றச்சாட்டு

# அனுரா பண்டாரநாயக்காவை கைது செய்ய சட்டமா அதிபருடன் பொலிஸார் ஆலோசனை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது கோலை பில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் பணி புரிந்த தேர்தல் அதிகாரியையும், கிராமசேவையாள ரையும் பயமுறுத்தியதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதம அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவுக்கு எதிராகப்பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாட்டை விசாரித்த பொலிஸ் அதி காரிகள் அனுரா பண்டாரநாயக்காவை கைது செய் வதற்கு ஆலோசனையும் அனுமதியும் கோரி சட்டமா அதிபருக்கு விண்ணப்பித்துள்ளனர். கடந்த செவ்வா யன்று அனுரா பண்டாரநாயக்கா பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவரது வாக்கு மூலமும் பதிவு செய்யப்பட்டது. இச் சம்பவம் தொடர் பாக கைது செய்யப்பட்டுள்ள மூன்று நபர்களும் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இது தொடர்பாக சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அரசியல் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 : 50

# முரசொலி

முரசு 05 ஒலி 174 பிரசோற்பத்தி வைகாசி 07 (21-05-1991) செவ்வாய்

# பொலிஸ் - இராணுவம் மோதல்

# பொலிஸ் கொன்ஸ்டபிள் பலி!

## இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட தகராறு

ஹிங்குராக்கொடயில் பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பொலிஸ்காரர் ஒருவர் பலியானார். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை நிகழ்ந்துள்ளது.

இங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றுக்கு சாதாரண உடையில் வந்த இராணுவத்தினர் ரிக்கற் இன்றி உட்பிரவேசிக்க முயன்ற போது அங்கு கடமையில் இருந்த பொலிஸார் அவர்களை தடுத்ததைத் தொடர்ந்து இந்த மோதல் ஏற்பட்டது.

இராணுவ ட்ரக்கில் வந்த சிவில் உடை அணிந்தவர்கள் பொலிஸ்காரர் ஒருவரின் துப் —04ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவ் ஆட்சியைக் கைப்பற்றுவது சந்தேகமே என டெய்லி நியூஸ்

ராஜீவ் காந்தி இம் முறை ஆட்சியை பிடிப்பது சந்தேகமே என கொழும்பிலிருந்து வெளியாகும் அரச சார்பு "டெய்லி நியூஸ்" பத்திரிகை தெரிவித்துள்ளது. பிரசார நடவடிக்கைகளின் போது காங்கிரஸ் கூட்டங்களில் கூடியவர்களின் வாக்குகள் அனைத்துமே காங்கிரஸ் கட்சிக்கு என சொல்லி விட முடியாது. எனக்குறிப்பிடும் அப் — 04 ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம்கள் மீதான தாக்குதல் பொலிஸார் இடைநிறுத்தம்

இம் மாதம் 8 ஆம் திகதி திக்குவலையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக திக்குவலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நான்கு பொலிஸ்காரரும் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் இளைஞர் ஒருவரிடம் மோட்டார் சைக்கிளை கேட்டதாகவும் அதை அவர் கொடுக்க மறுத்ததால் வாகனங்களில் வந்த சிவுடை அணிந்தவர்கள் முஸ்லிம்களைத்தாக்கியும் பள்ளிவாசலை சேதப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆனையிறவு முகாம் பகுதிகளில் காலையும், மாலையும் குண்டுவீச்சு

ஆனையிறவு முகாமருகே நேற்று காலையும் மாலையும் குண்வீச்சு நடைபெற்றது. காலை 8 மணியளவில் பொம்மர்கள், அவ்ரோ, இரு ஹெலிகள் என்பன தாக்குதலை நடாத்தின.

மீண்டும் மாலை 3 மணி அளவிலும் முகாமருகே குண்டுவீச்சு நடைபெற்றது

## அச்சுவேலியில் ஹெலி தாக்கு

நேற்றுக் காலை 9மணியளவில் அச்சுவேலிப் பகுதியில் 'ஹெலி' துப்பாக்கிப்பிரயோகம் நடாத்தியுள்ளது. 71

## நிலாவெளி கடற்கரையில் வெள்ளை வானில் 6 பேர்கடத்தல்

திருமலை மாவட்டத்திலுள்ள நிலாவெளி கடற்கரை பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த 6 பொதுமக்களை இனந் தெரியாதோர் கடத்திச் சென்றுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி நடந்த இச்சம்பவத்தில் வெள்ளை வானில் வந்தவர்களே கடத்திச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## உதைபந்தாட்ட போட்டி முடிவில் கைகலப்பு; பலர் காயம்

வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த உதைபந்தாட்டப் போட்டியின் இரு பகுதியினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டதால் பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகத்துக்கும் இறுவிளான் ஞானோதயா விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் 2:2 என்ற கோல் கணக்கில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய தேர்தலை கண்காணிக்க சார்க் குழு செல்கிறது

இந்தியப் பொதுத் தேர்தலை கண்காணிக்க எட்டுப் பேர் கொண்ட சார்க் நாடுகளின் குழு இந்தியா சென்றுள்ளது.

இக்குழுவில் இரு இலங்கையரும் இடம் பெறுகின்றனர். இன ஆய்வுக் கழகத்தின் நிர்வாக அதிகாரி ஜீவன் தியாகராஜாவும், பிரசன்ன பெர்னாண்டோவுமே இக்குழுவில் இடம்பெறும் இலங்கையர்களாவர்.

உள்ளே

★ உயர்தர விசேட பரீட்சை புதிய நேர சூசிகை.

★ பிரான்ஸ் குழு மீதான தாக்குதல் பற்றிய விசாரணைத்தகவல்கள்.

## விடுவிப்பு நிகழ்ச்சியில் பரா

## போராட்டத்தில் இணையுங்கள் அல்லதுதுரோகம்புரியாது இருங்கள்

''பதினெட்டு வருடகாலத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணத்துடன் எதிரிகளை விரட்டியடித்து வளர்ச்சியடைந்து வருகிறது. இக்காலகட்டத்தில் எமது போராட்டத்திற்குஎதிராக தவறிழைத்தவர்களை மன்னித்து சகோதரர்களாக அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கிறோம்'' என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மக்கள்உறவு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு பரா நேற்றுமாலை — 04 ஆம் பக்கம் பார்க்க

## முத்தமிழ் விழா ஜூன் 6 இல்

தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின், பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழா எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை மங்களகரமாக நடைபெற உள்ளன.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டமைக்கமைய மானிப்பாய், புங்குடுதீவு, நெல்லியடி ஆகிய இடங்களில் இவ்விழா நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பண்டைத் தமிழரின் பெருமைகள், பழந்தமிழர் சான்றுகள், தமிழர்தம்கலை, பண்பாட்டுத் தனித்துவங்கள், தமிழீழ மக்களின் — தமிழீழ மண்ணின் தேவைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையிலான அறுபதுக்கும் மேற்பட்ட நிகழ்வுகள் இயல், இசை, நாடக வடிவங்களில் பொங்கிப் பொலிந்திட உள்ளன. 71,47

## கட்டுவனில் குண்டுவீச்சு

நீண்டநாள்களுக்கு பின்னர் நேற்று கட்டுவன் பகுதியில் குண்டு விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்று மாலை 3, 30 மணியளவில் திடீரென வந்த இரு பொம்மர்கள் நான்கு குண்டுகளை வீசியதாக தெரிவிக்கப்படுகிறது. சில வீடுகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. 48

## மன்சூர் தலைமையிலான குழு விரைவில் சென்னை செல்லும்

ஜனாதிபதி பிரேமதாஸ விரைவில் தமிழகத்துக்கு அரசசார்பு பிரதிநிதிகள் குழுவொன்றை அனுப்பவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. இந்திய தேர்தல்கள் முடிவடைந்து தமிழகத்தில் புதிய அரசு பதவி ஏற்றபின்னரே ஸ்ரீலங்கா அரசின் தூதுக் குழு சென்னை செல்லவுள்ளது. இத்தூதுக்குழுவிற்கு வாணிபத்துறையமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் தலைமை தாங்கவுள்ளார். அதுக்குழுவின் செயற்திட்டங்கள் தற்போது ஆராயப்பட்டு வருகிறதாம்.

✯ பிரான்ஸ் குழு மீது தாக்குதல்; ஆணைக்குழு முன் எம். எஸ். எப். அதிகாரி சாட்சியம்

# ஹெலித்தாக்குதலிலிருந்துகாப்பாற்றுங்கள்என உயர்அதிகாரிகளை அவசரமாகக் கேட்டேன்

## அவர்கள் என்னைக் குறுக்குக்கேள்வி கேட்டு அப்போது காலத்தைக் கடத்தினர்

எமது குழுவினர் மீது விமானப்படைக்ஹெலிகொப்டர் தாக்குதலை நடாத்திக் கொண்டிருக்கிறது. அதனை உடன் நிறுத்துமாறு உத்தரவிட்டு எமது சக அங்கத்தவர்களின் உயிர்களைக் காப்பாற்றுங்கள் என அனுராதபுரத்திலுள்ள விமானப் படை பொறுப்பதிகாரி விங் கமாண்டரின் அலுவலகத்துக்கு அவசர அவசரமாக தொலைபேசியில் அறிவித்தேன். ஆனால் அங்கிருந்த அதிகாரியோ 'உங்களுக்கு எப்படித் தெரியும்?' என திரும்பத்திரும்பக் கேட்டு காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தார் என மடுவில் கடந்த 3 ஆம் திகதி பிரான்ஸ் வைத்தியக் குழுவான 'மெடிசின் சான்ஸ் ஃபுரொன்டியேஸின் (எம். எஸ். எப்) மீது ஆகாயப்படையினர் மேற்கொண்ட தாக்குதல் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு முன் சாட்சியமளித்த மேற்படி நிறுவனத்தின் கொழும்புக்கிளை நிருவாகி கிறிஸ்டீன்நீவுப் தெரிவித்தார்.

### முன் அனுமதி பெறப்பட்டது

அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது-

மடுவிலிருந்து எமது 50 ஸ்ரீ 7526 இலக்க வாகனத்தில் கடந்த 3 ஆம் திகதி கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர். இதற்கான அனுமதி கூட்டுப்படைத் தலைமையகத்திலிருந்து முன்னரேயே பெறப்பட்டிருந்தது.

### வானொலித்தொடர்பு வாகனத்தில் இருந்தது

இந்த வாகனத்துடன் கொழும்பில் எமது தலைமையலுவலகத்துக்கு வானொலித் தொடர்பு இருந்தது. அன்றைய தினம் நண்பகல் ஒரு மணி போல குறித்த வாகனத்திலிருந்த ஜோன் பெட்டரிச் தமது வாகனத்தின்மீது ஹெலி தாக்குதல் நடாத்துவதாக பதற்றத்துடன் கூறினார். தாங்கள் புதுக்குளத்திற்கு அருகில் யாழ் வீதியில் 4 மைல்களுக்கு அப்பால் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அப்பொழுது வானொலியில் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அதையடுத்து கத்தரீன் தான் காயமடைந்துள்ளதாகக் கூறினார்.

### இராணுவத்துடன் தொடர்பு இல்லை

அதையடுத்து நான் அனுராதபுரம் விமானப்படைப் பொறுப்பதிகாரி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டேன். அனுராதபுரம் இராணுவ முகாம் அதிகாரியுடனும், வவுனியா பாதுகாப்பு இணைப்பதிகாரியுடனும் தொடர்பு கொள்ள முயன்றும் முடியவில்லை.

### மீண்டும் தாக்குதல்

அதையடுத்து பிற்பகல் 3.25 மணிக்கு ஜோன் பெட்டரிச் மீண்டும் துப்பாக்கிச் சூடுகள் தம் மீது தொடர்வதாகவும் அதை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் எம்மைக் கேட்டுக் கொண்டார்.

### பொம்மர் தாக்கியது

அதன் பின் குண்டு போடும் விமானம் ஒன்று வந்து கார் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து சுமார் 10 அல்லது 20 மீற்றர் தூரத்திற்கு அப்பால் குண்டு ஒன்றைப் போட்டது. இதனால் தொடர்ந்தும் காருக்கு அருகில் நிற்க முடியாது நாங்கள் ஓடிப்போய் அருகிலுள்ள பற்றைக்குள் ஒளிக்கிறோம் என அவர் எனக்கு வானொலியில் அறிவித்தார். அதன் பின் எமது பிரதிநிதிகள் உயிருடன் இருக்கின்றனரா என்பதை என்னால் அறிய முடியவில்லை.

### சாரதியைக் காணவில்லை

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் திருமதி மரிக்பெற்றீஷியா எம்முடன் தொடர்பு கொண்டு திரு.ஜோன் பெட்டரிக் காலிலும், கத்தரீன் மேக்காவிலும் காயமடைந்திருப்பதாகவும், சாரதியைக் காணவில்லை எனவும் தடுமாற்றத்துடனும் கூறினார்.

பின்னர் அனுராதபுரம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மாலை 5.20 மணிக்குப் புதுக்குளம் சென்று காயமடைந்தவர்களை வவுனியாவுக்கு எடுத்து வந்தனர்.

### முன்னரும் தாக்கப்பட்டார்

கடந்த பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி கத்தரீனும் இன்னுமொரு தாதியும் 12 நோயாளிகளை ஏற்றிக் கொண்டு மடு அகதி முகாமிலிருந்து மன்னார் நோக்கிச் சென்றனர்.

ஹெலி அவர்களை நோக்கி வரவும் இரண்டு தாதிகளும் அம்புலன்ஸ் வண்டியை விட்டு இறங்கினார்கள். ஹெலி மூன்றுமுறை எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தது. இதனால் கத்தரீன் சிறு காயங்களுக்கு உள்ளானார். அந்த நேரத்தில் ஊரடங்கு அமுலில் இருக்கவில்லை.

### படையினரின் காரணம் இது

வாகனத்தில் இருந்து ஹெலி மீது தாக்குதல் நடத்தியதால் தான் வாகனம் தாக்கப்பட்டது எனப் பின்னர் ஹெலியைச் செலுத்தியவர் காரணம் தெரிவித்தார்.

அதனையடுத்து பெப்ரவரி 6ஆம் திகதி தொண்டர்ஸ்தாபனப் பிரதிநிதிகள் பாதுகாப்புப் படை அதிகாரிகளைச் சந்தித்து இத்தகைய தாக்குதல்களைத் தடுக்குமாறு கேட்டிருந்தனர். (இந்தப் பேச்சுக்களில் காணப்பட்ட தீர்மானங்கள் ஆணைக் குழுவிடம் கையளிக்கப்பட்டன.)

### குறுக்கு விசாரணை

ஆணையாளர்:—ஒரு குண்டு போட்டால் எத்தனை மைல் தூரத்திற்குக் கேட்கும்?

பிரிகேடியர் சமரக்கோன் (பாதுகாப்புப் படையினர் சார்பில் ஆஜரானவர்):— சுமார் 10 மைல் தூரம் கேட்கும்.

சாட்சி:— 10 மைல் தூரம் மட்டும்தான் கேட்குமா?

சமரக்கோன்:— அது உங்கள் கேட்கும் சக்தியைப் பொறுத்தது.

சாட்சி:— யாழ்ப்பாணத்தில் போட்ட குண்டுகளின் சத்தத்தை எமது பிரதிநிதிகள் மன்னாரில் கேட்டுள்ளனர்.

சமரக்கோன்:— அது வளைகுடாவில் போடப்பட்ட குண்டாக இருக்கலாம்.

## ஊரடங்குச் சட்ட அமுலாக்கம் பற்றி கூட்டுப்படைத்தலைமையகத்துக்குதெரியாது

வடக்கில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவது சில வேளைகளில் கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையலுவலகத்திற்குத் தெரிவதில்லையாம்.

மடுவில் எம். எஸ். எப். தொண்டர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆகாயத்தாக்குதல் தொடர்பான ஆணைக் குழு விசாரணையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கமிஷன்முன்சாட்சியமளித்த எம். எஸ் எப். நிறுவன கொழும்புக்கிளை நிருவாகி கிறிஸ்டீன் நீவுப் சாட்சியமளிக்கையில்கூட்டுப்படைத் தலைமையலுவலகத்துடன் தான் தொடர்பு கொண்டு கேட்டபோது சம்பவதினம் மடுவில் ஊரடங்கு அமுல் செய்யப்படவில்லை எனத் தெரிவித்ததாகவும், ஆனால் இலங்கை வானொலி அறிவிப்பில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் தனது பலநாள் அனுபவத்தின் மூலம் ஊரடங்குச் சட்ட அமுலாக்கம் பற்றி கூட்டுப் படைத்தலைமையகம் சரியான தகவல்களை உடனடியாகப் பெறுவதில்லை எனத் தான் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## க.பொ.த.உயர்தர விசேட பரீட்சை 1990 புதிய அட்டவணை 23.05.91-05.06.91

| திகதி | பாடம் | நேரம் |
|---|---|---|
| 23 05. 91 | 03 பௌதிகவியல் I | 8. 30 - 10.30 |
| வியாழக்கிழமை | 17 கணக்கியல் I | 8 30 - 11.30 |
| 11-ம் நாள் | 41 பாளி I | |
| | 07 விவசாய விஞ்ஞானவியல் I | 12.30 - 15.30 |
| | 49 ஜேர்மன் I | |
| | 50 ருஷியன் I | |
| | 52 உருது I | |
| | 53 சீனமொழி I | |
| 24. 05. 91 | 03 பௌதிகவியல் II | 8.30 - 11.30 |
| வெள்ளிக்கிழமை | 17 கணக்கியல் II | |
| 12-ம் நாள் | 14 பாளி II | |
| | 49 ஜேர்மன் II | |
| | 50 ருஷியன் II | |
| | 52 உருது II | |
| | 53 சீனமொழி II | |
| | 07 விவசாய விஞ்ஞானவியல் II | 13 30 - 16.30 |
| | 28 கிரேக்க உரோம நாகரிகம் II | |
| 25. 05. 91 | 38 சிங்களம் II | 8.30 - 11.30 |
| சனிக்கிழமை | 22 இந்துசமயம் I | 12.30 - 15.30 |
| 13-ம் நாள் | 23 கிறிஸ்தவம் I | |
| | 24 இஸ்லாம் I | |
| | 42 சமஸ்கிருதம் I | |
| 29. 05. 91 | 29 சித்திரம் II | 8 30 - 11.30 |
| புதன்கிழமை | 40 ஆங்கிலம் I | |
| 14-ம் நாள் | 22 இந்துசமயம் II | 12.30 - 15.30 |
| | 23 கிறிஸ்தவம் II | |
| | 24 இஸ்லாம் II | |
| | 42 சமஸ்கிருதம் II | |
| 30-05-91 | 29 சித்திரம் III | 8 30 - 11.30 |
| வியாழக்கிழமை | 40 ஆங்கிலம் II | |
| 15-ம் நாள | | |
| | 16 வர்த்தகமும் நிதியும் I | 12 30 - 15,30 |
| 31 - 05 - 91 | 08 புவியியல் I | 8.30 - 11.30 |
| வெள்ளிக்கிழமை | 16 வர்த்தகமும் நிதியும் II | 13.30 - 16,30 |
| 16-ம் நாள் | | |
| 01 06. 91 | 08 புவியியல் II | 8,30 - 11.30 |
| சனிக்கிழமை | 26 இந்துநாகரிகம் I | 12 30 - 15 30 |
| 17-ம் நாள் | 27 இஸ்லாமிய நாகரிகம் I | |
| 03. 06. 91 | 08 புவியியல் III | 8 30 - 11 30 |
| திங்கட்கிழமை | 26 இந்துநாகரிகம் II | 12.30 - 15 30 |
| 18-ம் நாள் | 27 இஸ்லாமிய நாகரீகம் II | |
| 04. 06. 91 செவ்வாய்க்கிழமை | 12 அரசியல் மூலதத்துவங்கள் I | 8.30 - 11.30 |
| 19-ம் நாள் | 15 அளவைவிஞ்ஞானமுறை I | 13,30 - 16.30 |
| 05. 06. 91 புதன்கிழமை | 12 அரசியல் மூலதத்துவங்கள் II | 8.30 - 11,30 |
| 20-ம் நாள் | 15 அளவைவிஞ்ஞானமுறை II | 12 30 - 15.30 |

(ப-11)

## 'கண்ணிவெடி புதைக்கப்பட்ட பாதைவழியாக பயணம் செய்யுமாறு இராணுவம் அறிவுறுத்தியது'

'கண்ணி வெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ள வீதி வழியாக எமது வாகனங்களைச் செல்லுமாறு கூறி எம்மை அதில் சிக்கவைக்க கூட்டுப்படைத்தலைமையகம் பல தடவைகள் முனைந்துள்ளது'

இவ்வாறு மடு சம்பவம் பற்றி விசாரணை செய்யும் ஆணைக்குழுமுன் சாட்சியமளித்த எம். எஸ். எப் நிறுவன கொழும்புக்கிளை நிருவாகி கிறிஸ்டீன் நீவுப் தெரிவித்தார்.

கடந்த 3ஆம் திகதி மடுவிலிருந்து எம். எஸ். எப், குழு வாகனமொன்று கொழும்பு வர கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியைக் கோரினோம். அப்போது அவர்கள் மடு-பண்டிவிரிச்சான்-வவுனியா பாதையைப்பாவிக்கும் படி எமக்குக் கூறினார்கள். ஆனால் அந்தப் பாதையில் கண்ணிவெடிகள் உள்ளமை எல்லோருக்கும் தெரியும்,

இதனால் அந்தப்பாதையை பொதுமக்களோ, எம். எஸ். எப் நிறுவனமோ பாவிப்பதில்லை. ஆகையால் மடு-பாலம்பிட்டி- இரணைக்குளம் பாதையைத்தான் நாங்களும் யூ என். எச் சி ஆர். பிரதிநிதிகளும் பாவிக்கின்றோம்.

இதற்கு முன்னரும் இவ்வாறு கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ள ஆபத்தான பாதைகள் வழியாக எம்மைப் பயணம் செய்யுமாறு கூட்டுப்படைத் தலைமையகம் எமக்கு அறிவுறுத்தி இருக்கிறது' எனவும் கிறிஸ்டீன் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார்.

## சி.க.கூ. சங்கம் ஸ்தாபகர் நினைவு தினம்

யாழ் மாவட்ட சி. க. கூ ச. சமாச முன்னாள் தலைவரும் ஸ்தாபகருமாகிய அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நாளை 22 ஆம் திகதி புதன் கிழமை காலை 9. 30 க்கு நடைபெறவுள்ளது. (71)


## சிறு விளம்பரம்

### தேவை

விலவம் பழம் தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம் 05055

### கண்டெடுக்கப்பட்டது

சில மருத்துவக்கருவிகள் கொண்ட பிரயாணப் பை ஒன்று இம்மாதம் 17ஆம் திகதி பூநகரியில் கண்டெடுக்கப்பட்டது. உரியவர்கள் ஆர். ஜெயந்தராசா, பழையவாய்க்கால், பூநகரி என்னும் முகவரியில் அடையாளம் காட்டிப் பெறலாம். 05090

# 2500 யாழ் மாணவர்களுக்கு
# விசேட முறைசாரா தொழிற் பயிற்சி

யாழ் கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப்பிரிவு 1989 - 90ஆம் கல்வி ஆண்டில் 2500 மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் பரவலாக உள்ள முறைசாரா செய்முறைப் பயிற்சி நிலையங்களால் இவர்களுக்கு முப்பத்தியொரு தொழிற்பிரிவுகளில் விசேடபயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வித்திணைக்களத்தினதும், ஐக்கியநாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தினதும் நிதியுதவியைக் கொண்டு இவர்களுக்கு இந்த சிறப்புப்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.யாழ் மாவட்டத்தில் பெருந்தொகையானோருக்கு ஏககாலத்தில் சிறப்புத் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

இப்பயிற்சியினைப் பெற்று வெளியேறியோரில் அநேகமானோர் தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளதாகவும், இவ்வாறு பயிற்சி பெற்றோருக்கு தற்போதைய சூழ்நிலையில் குடாநாட்டில் பெரும்கிராக்கியேற்பட்டுள்ளதாகவும் யாழ் தொழில்நுட்பக் கல்வியதிகாரி ச. சுப்பிரமணியம் முரசொலிக்குத் தெரிவித்தார். (ப-11)

## கல்கத்தா நாய்களுக்கு கொரியாவில் பெரும் கிராக்கி

மிகவும் ஜனநெருக்கமும் ஏழை மக்கள் அதிகமாகவும் உள்ள இந்தியாவின் கல்கத்தா நகரத்தில் நாய்களின் கூட்டமும் பெருகிவிட்டன.

தொல்லை சமாளிக்க முடியாதளவு ஒருபக்கம் நோய்கள் பரவின - இன்னொரு பக்கம் ஏதுமறியாக் குழந்தைகள் கடிவாங்கின.

கல்கத்தா மாநகராட்சி இந்தப் பிரச்சினை கலிலிருந்து விடுபட கொரியாவுடன் ஒரு வர்த்தக உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி கல்கத்தாவிலிருந்து ஆயிரமாயிரம் நாய்கள் ஏற்றுமதியாகின.

அங்கே கொரியாவில் அது 'நாய்ப்புரியாணி' ஆனது இப்பொழுது நாய்க்கறி பதப்படுத்தும் தொழிற் கூடங்கள் கல்கத்தாவில் பெருகிவிட்டன. கொரியாவில் கல்கத்தா நாய்களுக்கு இப்போது பெரும் கிராக்கியாம்.

## நவம்பரில் பஜட் சமர்ப்பிக்கப்படும் மதிப்பீட்டுவேலைகள் இப்போது ஆரம்பம்

1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட வேலைகள் இப்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அமைச்சர்களின் வரவு செலவின் மதிப்பீடுகள் இப்போது நிதியமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நிதி ஒதுக்கப்படும்.

1992 ஆம் ஆண்டுக்கான இந்த வரவு செலவுத் திட்டம் இவ்வருடம் நவம்பரில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## அம்பாறையில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் 2500 தமிழ்மக்கள் கைது

அம்பாறையில் இராணுவத்தினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பில் 2500 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டோர் எங்கு கூட்டிச் செல்லப்பட்டார்கள் என்பது பற்றிய தகவல்களெதுவும் அவர்களது பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையாம்.

இதே வேளை கிழக்கில் போரைதீவு, ஆயித்தியமலைப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

## கம் உதாவ

கம்புறுப்பிட்டியில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 'கம் உதாவ' நிகழ்ச்சிகளுக்கு அரசு மூன்று கோடி எழுபது இலட்சம் ரூபாவினைச் செலவிடவுள்ளது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்குப் பதிலளிக்கையில் இத்தகவல்தெரிவிக்கப்பட்டது

## சென்னையில் கடத்தப்பட்ட 15 கார்கள்மீட்பு இரு இலங்கையர் உட்பட நால்வர் கைது

சென்னை நகரில் பல கார்களையும், மோட்டார் சைக்கிள்களையும் கடத்திய தொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டோரில் இருவர் இலங்கைத் தமிழர்கள் என அறிவிக்கப்படுகின்றது.

புதுப்பேட்டை நெடும்பூரில் கைது செய்யப்பட்ட இந்த இரு இலங்கையர்களும் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் 15 மோட்டார்க் கார்களும், ஏழு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

## பயணிகள் பயணம்

கடந்த சனி இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதற்காக வந்த பயணிகள் சங்குப்பிட்டியில் இருந்து 24 மினிபஸ்களில் வவுனியா சென்றனர்.

சுமார் 1000க்கும் மேற்பட்ட பயணிகள் இந்தபஸ்களில் வவுனியாவுக்கு பயணத்தைத் தொடர்ந்தனர். (ப-35)

## 'பொலோ மீ' ஆங்கிலப் பரீட்சை வட, கிழக்கில் பிற்போடப்படும்

வடக்குக் கிழக்கில் 'பொலோ மீ' ஆங்கிலப் பரீட்சை சில தினங்களுக்கு ஒத்திவைக்கப்படலாமென கொழும்புத் தகவல் ஒன்றில் தெரியவருகின்றது.

இப்பரீட்சை ஜூன் முதலாம் திகதி நடாத்தப்படவிருந்தது. ஆனால் இங்கு இக்காலப்பகுதியில் க. பொ. த உயர்தர, விசேட பரீட்சை நடாத்தப்படவுள்ளதினாலேயே 'பொலோ மீ' பரீட்சையை சில தினங்கள் ஒத்திவைக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதாம்.

## மன்னார்த் தீவுடனான தொடர்புகள் பல நாட்களாகத் தொடர்ந்து துண்டிப்பு

மன்னார்த் தீவுக்கும்வெளிப்பகுதிக்கும் இடையேயான தொடர்புகள் நீண்ட நாட்களாக துண்டிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தீவிலிருந்து வெளியேறவும், தீவுக்குச் செல்வதற்கும் கடல்வழியைப்பாவிப்பதற்கு இராணுவம் தடைவிதித்ததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

குறிப்பிட்ட பாதையைப் பயன்படுத்துமாறு இராணுவம் கூறிய போதிலும் அச்சம் காரணமாக அதனைப் பயன்படுத்த மக்கள் முன்வருவதில்லை எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (70)

## அடையாள அட்டைகளைப்புதுப்பித்தல் அரசால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது

பழைய ஆளடையாள அட்டைக்குப் பதிலாக புதிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த புதுப்பித்தல் நடவடிக்கையின் முதல் கட்டமாக 1972, 1973 ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட ஆளடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதியஆளடையாள அட்டைகள் தற்போது வழங்கப் படவுள்ளன.

இக்காலப் பகுதியில் சுமார் ஏழுலட்சம் பேர் ஆளடையாள அட்டைகளைப் பெற்றிருந்தனர்.

ஆளடையாள அட்டையை புதுப்பிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கடந்த 14 ஆம் திகதி வெளியான முரசொலிப் பத்திரிகையில் விபரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## போதனாசிரியர் தெரிவு நேர்முகப் பரீட்சை நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

பயிலுநர் ஆசிரியர்களுக்குப் போதனைகள் வழங்குவதற்காகப் போதனா ஆசிரியர்களைத் தெரியும் நேர்முகப் பரீட்சை நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தில் ஆரம்பமானது.

பயிலுநர் ஆசிரியர்களுக்குக் கோட்ட மட்டங்களில் பயிற்சிகள் வழங்கப்படுவதற்காகவே இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நேர்முகத் தெரிவில் நேற்றைய தினம் 30க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (ப-11)

## யாழ்நூலக 10 ஆவதுவருட நினைவுதினத்தில் 'சாளரம்' மாத இதழ் வெளிவரும்

யாழ்ப்பாணத்திலிருந்து 'சாளரம்' என்னும் புதிய மாதஇதழ் ஒன்று வெளியிடப் படவுள்ளது.

'இளையோர் இதழ்கவடி' என்னும் அறிமுகத்துடன் வெளிவரவுள்ள சாளரத்தின் முதலாவது இதழை யாழ் நூலகம் எரிக்கப்பட்ட 10 ஆவது வருட நினைவு தினமான ஜூன்மாதம் முதலாம் திகதி வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிற் கல்வியுடன் சேர்த்து தேசபக்தி, சமூகநேயம், மானுடநேயம் ஆகியவற்றையும் நாம் வாழும் சமூகத்தைப் பற்றிய அறிவையும் மாணவர்கள் கற்றுக்கொள்ள 'சாளரம்' உதவும் என இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிமுகச் சிற்றேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரியாலை அணி வெற்றி பெற்றது

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் மென்பந்துப் போட்டித் தொடரின் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அரியாலை சனசமூக நிலைய அணி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை அணி 5 விக்கற்றுகள் இழப்பிற்கு 84 ஓட்டங்களைப் பெற்றன.

ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலைய அணியினர் தமது துடுப்பாட்டத்தில் 10.5 ஓவர்களில் சகல விக்கற்றுகளையும் இழந்து 55 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

இப்போட்டிக்கு நடுவர்களாக கப்ரின் டீ.ஏ.எம் குணலிங்கம், பீ. ரீ. திருநாவுக்கரசு ஆகியோர் கடமையாற்றினர். (16)

## உடலில் நோய்கள் உருவாக காந்தக் குறைவே காரணம்

இயற்கையிலேயே மனித உடம்பில் காந்த சக்தி இருக்கிறது இது பலர் அறியாதது.

மூளை, இருதயம் மற்றும் பல சுரப்பிகளிலிருந்து வெளியாகும் இலேசான மின்சக்தியினால் காந்தம் உருவாகின்றது மனித உடலை ஒரே சீராக இயங்க வைப்பதற்கு அடிப்படை, காந்த சக்திதான். இந்த சக்தியில் குறைவு ஏற்படும் பொழுதுதான் நோய்கள் தோன்றுகின்றன.

இந்த அடிப்படையில் பெங்களூரில் ஒரு டாக்டர் வெறும் காந்தங்களை வைத்து நோய்களைக் குணப்படுத்தும் புதிய மருத்துவ முறையை அறிமுகப்படுத்தியுள்ளார்.

150க்கும் மேலான நோய்களை இதன்மூலம் குணப்படுத்த முடியும் என்கிறார் சாம்ராஜ் என்ற அந்த டாக்டர்.

இந்த மருத்துவ முறையில் "வட துருவகாந்தம்", "தென் துருவ காந்தம்" என இரு காந்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## அதிக வருமானத்தைக்கொடுத்தயாழ் சேவைதடையால் ரயில்வேக்கு 100 மில்லியன் நஷ்டம்

கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து ரயில் சேவை தடைப்படுத்தப் பட்டதனால் ரயில்வே திணைக்களத்திற்கு 100 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் கொழும்பு காங்கேசன் ரயில் சேவை ரயில்வேதிணைக்களத்திற்கு மாதாந்தம் 10. 5 மில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுக்கொடுத்து வந்தது.

இந்த வருமானம் தற்போது இல்லாததனால் இலங்கை அரசுக்கு பெருநஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன. (ப- 11)

## 100 ஈராக் பிரஜைகள் ஈரானிய கமாண்டோக்களால் கொலை

ஈரானிய கமாண்டோக்கள் ஈராக்கிற்குள் அத்துமீறிப் பிரவேசித்துத் தமது பிரஜைகளில் 100 பேரைக் கொன்றுவிட்டதாக ஈராக் ஐக்கியநாடுகள் சபையிடம் புகார் செய்துள்ளது.

இவ்வாறு கொல்லப்பட்டோரில் 52 பேரின் சடலங்கள் தெற்கு ஈராக்கிலும், ஏனைய 48 சடலங்கள் தென்கிழக்குப் பாக்தாத்திலும் கண்டெடுக்கப்பட்டதாகவும் ஈராக் குற்றஞ் சாட்டியுள்ளது.

# பரவலான வன்முறை மத்தியில் முதற்கட்ட இந்தியத் தேர்தல்

நேற்று நடைபெற்ற 10 வது இந்திய பொதுத்தேர்தலின் முதற்கட்ட வாக்களிப்பு வன்முறைகளின் மத்தியிலேயே நடைபெற்றது.

முதல் நாள் வன்முறையில் 15 பேர் கொல்லப்பட்டனர். இதேசமயம் நேற்று நடைபெற்ற முதற்கட்ட தேர்தலில் தலைநகர் டில்லியில் மந்த கதியிலேயே வாக்களிப்பு நடைபெற்றது.

தேர்தலுக்கு முந்திய இரவில் டில்லியில் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் மீது சீக்கிய தீவிரவாதிகளால் கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் இரண்டு பொலிஸார் உட்பட நால்வர் பலியாகினர் 30 பேர் காயமடைந்தனர் இதனால் டில்லியில் நிலவிய பதற்றம் வாக்களிப்பையும் பாதித்தது.

இதேவேளை பீஹார், உத்தரபிரதேசப்பகுதியில் நடைபெற்ற வாக்குப் பெட்டி அபகரிப்பினால் அங்கு ஒன்பது இடங்களில் வாக்களிப்பு நிறுத்தப்பட்டது வேட்பாளர்களால் நியமிக்கப்பட்ட காடையர்களே வாக்குப்பெட்டி அபகரிப்பு முயற்சியில் ஈடுபட்டவராம்.

ஆந்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும் நேற்று வன்முறைகள் நடைபெற்றன.

சில இடங்களில் தேர்தல் அதிகாரிகளும் சுட்டுக்கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன, ஒருபோதுமில்லாத அளவு இந்த தேர்தலில் வன்முறைக்கு அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வு 1990/91
(M. Phil. Q.)

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பில் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்து நாகரிகம், தமிழ், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு, மெய்யியல், மொழியியல், நுண்கலை.

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்பப்படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 20 05 91 இலிருந்து 20 06 91-ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 10 ரூபா செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும் போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர் தபால் மூலம்பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 8/ ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டிய 38×25 ச மீ அளவுடைய தபால் உறைகளையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 30 06 91 திகதிக்கு முன்பாக கலைப் பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் 30.06.1991 இற்குப்பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.
16.05.1991　　08090

## கண்பார்வைகுறைந்தமாணவர்க்கு மூக்குக்கண்ணாடி வழங்க ஏற்பாடு

தற்போது பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களில் கண்பார்வைகுறைவான வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்க யாழ் கல்வித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

இதனால் மேற்கூறிய குறைபாடு உடைய மாணவர்களில் 10பேரினது பெயர் விபரங்களை அண்மையில் பெற்ற கண்பரிசோதனை அறிக்கையுடன் தமக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ் கல்விப்பணிப்பாளர் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளையும் கேட்டுள்ளார். 78

## கிளிநொச்சி மாவட்டத் தபால்கள் வவுனியாவிலிருந்து வந்தன

வவுனியாவில் பலநாள்களாக தேங்கிக் கிடந்த கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய தபால் பொதிகள் அண்மையில் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் எடுத்துவரப்பட்டது.

இத்தபால்பொதிகளில் கிளிநொச்சித் தபாலகத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளும் வந்து சேர்ந்துள்ளதாக கிளிநொச்சி தபாலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த பத்து மாதங்களாக கொழும்பிலிருந்து இத்தபாலகத்துக்கு முத்திரைகள் எவையும் வந்து சேரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 33

## தெகிவளை-கல்கிசை மாநகரசபைத் தேர்தல்
## 500 வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவில்லை

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது தெகிவளை கல்கிசை மாநகரசபைக்குரிய 700 தேர்தல் வாக்காளர் அட்டைகள் தபால் ஊழியரொருவரால் எடுத்துச் செல்லப்பட்டு வேட்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தபாற் திணைக்களமும் பொலிஸாரும் விசாரணையில் ஈடுபட்டு வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பந்தப்பட்ட தபால் ஊழியர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (48)

அனுரா...

நாதி ஒருவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். இவர் சம்பவ நேரம் அனுராவுடன் கூட இருந்ததாகக் கூறப்படுகிறது.

## யாழ் மாவட்ட தபால்கள் கப்பலில் வந்துள்ளன

இன்று பருத்தித்துறையிலிருந்து கொழும்பு செல்லும் லங்காசிறி கப்பலில் யாழ் குடாநாட்டுத் தபாற் பொதிகளும் அனுப்பி வைக்கப்படவிருப்பதாக தபாற் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பிலிருந்து பருத்தித்துறை வந்த கப்பலில் யாழ் குடாநாட்டுக்கான 210 தபாற் பொதிகள் வந்து சேர்ந்துள்ளன

இத்தபாற் பொதிகள் இன்று யாழ் பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டு நாளை மறுதினம் விநியோக நடவடிக்கைகள் வழமைபோல் தொடருமெனவும் தெரிவிக்கப்படுகிறது. 33

போராட்டத்தில்...

கன்னாகத்தில் நடந்த வைக்கப்பட்டோர் விடுவிப்புக் கூட்டத்தில் உரையாற்றினார், வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் பகீ தலைமையில் கூட்டம் நடைபெற்றது

தொடர்ந்து உரையாற்றுகையில் நாம் பல்வேறுபட்ட காரணங்களுக்காகவதைசெய்த இவர்களை நற்பிரஜையாக வாழவேண்டுமென்ற நோக்கில் பெற்றோர்களிடம் ஒப்படைக்கிறோம். இவர்கள் எமது போராட்டத்துடன் இணைந்து செற்படலாம் அல்லது நமக்குத் துரோகம் செய்யாமல் வாழ்ந்தால் மட்டுமே போதும் எனத் தெரிவித்தார். ப-11

ராஜீவ்...

பத்திரிகை, தமிழ் தீவிரவாதிகள் தொடர்பாக தற்போதைய இந்திய வெளியுறவு கொள்கையில் எதிர்காலத்தில் மாற்றம் ஏற்படாது என இலங்கை அரசு நம்புகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

உதைபந்தாட்டம்...

இதனையடுத்தே இந்தச் சண்டை மூண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சண்டை நடைபெற்றபோது அயல் வீடுகளில் இருந்தவர்கள் பதுங்கு குழிக்குள் புகுந்துகொண்டதாகவும், பாடசாலைத் தளபாடங்கள் பல சேதமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 48

பொலிஸ்...

பாக்கியைப் பறித்து அதனால் அவரைத் தாக்கியதாகவும், அதன் பின்னர் அவரை அருகில் இருந்த ஆற்று வாய்க்காலில் தூக்கி வீசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது இது தொடர்பாக மூன்று இப்பாய்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பேராசிரியர்களுக்கு வெற்றிடம்

## கிழக்கு பல்கலைக்கழகத்தை இயக்க முடியாத நிலை

கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற இராணுவநடவடிக்கையினால் கிழக்கு இலங்கைப் பல்கலைக்கழகத்திலபல வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

பேராசிரியர் மற்றும் உதவி விரிவுரையாளர்கள்கடமைக்கு வராததாலும், வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாலும் இப்பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கமுடியாத நிலையில் உள்ளதாகத் தெரியவருகிறது.

பத்துத் துறைகளுக்கே பேராசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் இப்பதவிகளுக்கு வெற்றிடங்களை நிரப்ப பல்கலைக்கழகப் பதிவாளர் விண்ணப்பங்களை கோரியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. ப-11

## யாழ்மாவட்ட பாடசாலைகளுக்கு ஜூன் 22 முதல் பொதுப்பரீட்சை

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் ஆண்டு 13 இல் கற்கும் மாணவர்களுக்கான பொதுப்பரீட்சை யாழ் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தினால் ஜூன் 22 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளதாக யாழ் கல்விப் பணிப்பாளர் ஆண்டு 13 வகுப்புக்களையுடைய சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கான பாடத் திட்டம் ஆண்டு 13 (ஆகஸ்ட் 1991) கலை வர்த்தகம், விஞ்ஞானம் முழுப் பாடத் திட்டத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் 15 பாடங்களுக்கும் பரீட்சை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்ப கட்டணம் காசுக் கட்டளையாக அனுப்பப்படவேண்டும் எனவும், இப் பரீட்சைக்கான நேர சூசி ஜூன் முதலாம் வாரத்தில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (78)

## தீவுப்பகுதி மக்கள் மீண்டும் பண்ணைவீதியூடாகசெல்கின்றனர்

தீவகத்தில் இருந்து யாழ்ப்பாணத்தில் தஞ்சமடைந்துள்ள வேலணை, புங்குடுதீவு, மண்கும்பான், மண்டைதீவு மக்களில் பெரும்பாலானோர் நேற்றையதினம்காலையில் தமது இருப்பிடங்களுக்கு செல்ல ஆரம்பித்தனர்.

இதனால் பண்ணைப்பாதையில் ஒரே சனக்கூட்டமாக காட்சியளித்தது. மக்கள் படகுகளில் செல்ல படகுகள் போதியளவு இல்லாதிருந்ததனால் தற்காலிகமாக போடப்பட்டிருந்த பாதையூடாக சைக்கிள்களை தூக்கிக் கொண்டுமிகவும் சிரமத்துடன் சென்றனர்.

தீவகத்தில் கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்களும், கோட்டக்கல்வி அலுவலக ஊழியர்களும் கடமையின் நிமித்தம் இப் பாதையூடாக சென்றனர். மண்கும்பான், மண்டைதீவு, புங்குடுதீவு, வேலணைப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்கள் வருகை திருப்திகரமாக காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. 78

### காலமானார்
### திருமதி ராணி அழகரட்ணம்

சாவெட்டி சேக்ரெட் ஹாட் கல்லூரியடியைச் சேர்ந்த திருமதி ராணி அழகரட்ணம் அமெரிக்காவில் காலமானார். இவர் அழகரட்ணம் சிரனிஸ்லாஸின் அன்பு மனைவியும் சிறாணி (கனடா), சிறாந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் அருமைத்தாயாரும், காலஞ்சென்ற சிமாம்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அருமைமகளும், காலஞ்சென்றமரியாம்பிள்ளையினதும், யோசெவ், அந்தோனிமுத்து, துரைராஜா, குணரட்ணம் (அமெரிக்கா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், மனோராஜ் (கனடா) இன் அருமை மாமியாரும் ஆவார். இறுதிச்சடங்கு அமெரிக்காவில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

தகவல்: எஸ். யோசெவ்

43, இராஜலிங்க வீதி,
வெள்ளவத்தை.　　05091

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார்வீதி டச்சு வீதி 'லக்ஷ்மி'பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 21. 05.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.